# தண்ணீரினால் ஞானஸ்நானம்

**கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்திற்கு முன் மாதிரியான நோவாவும் பிறரும்.**

**ஜெபம்:** பிதாவே, உம்மிடத்தில் நீர் கொண்டு வந்து, எங்கள் சபையில் ஒப்படைப்பவர்களை ஞானஸ்நானம் மூலமாக நாங்கள் வரவேற்குமாறு எங்களுக்கு உதவும். உமது வார்த்தையின் மூலம் நீர் போதிப்பது போல, விசுவாசிகள் யாவரும் பாவத்துக்கு மரித்து, ஒரு புதிய, புனிதமான, நித்திய வாழ்விற்குள் ஞானஸ்நானத்தின் மூலமாக எழுந்துவர இந்தப் பாடத்தின் மூலம் உதவி செய்யும்.

1. **உங்கள் இருதயத்தை ஜெபத்தின் மூலமாகவும் வார்த்தையின் மூலமாகவும் ஆயத்தம் செய்க.**

**மத்தேயு 3 ம் அதிகாரத்தில் காண்க:**

- எத்தகைய மனிதர்களுக்கு ஞானஸ்நானம் தேவவைப்படுகிறது, வச. 1-6 *(பதில். மோசமான மக்கள்)*
- ஞானஸ்நானம் பெறுவதற்கு தகுதியுள்ள நல்லவர்கள் என்று நினைத்த மதவாதிகளை யோவான் எவ்வாறு அழைத்தான்? *(வச. 7)*
- அவருக்கு அது தேவைப்பட்டவில்லை என்றாலும் இயேசு ஏன் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார்? *(வச. 13-15: எல்லாவற்றையும் சரியாக செய்வதற்கு)*



- உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சரீரத்தைப் பேதுரு நோவாவின் பேழைக்கு ஒப்பிடுகிறார். *(1 பேதுரு 3:18-22)*
- இருப்பினும், ஒரு பெரிய படகோ அல்லது விமானமோ நம்மைப் பரலோகத்துக்கு எடுத்துச் செல்ல முடியாது. நோவாவும் அவனது குடும்பமும் பண்டைய பேழையால் விடுவிக்கப் பட்டது போலவே, நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்தின் ஓர் அங்கமாக இருப்பதால், தேவன் பரலோகத்திற்கு நம்மை உயர்த்தி புதிய ஜீவனை அளிக்கிறார்.

**ரோமர் 6:1-14ல் காண்க.**

- எந்த விஷயங்களுக்காக நாம் இறக்க வேண்டும் என்று தேவன் கூறுகிறார்?
- பாவத்துக்கு மரித்த நாம் யாரோடு ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்பட்டோம்?
- இயேசுவோடு அடக்கம் பண்ணப்பட்ட நாம் அவரோடு எவ்வாறு இணைக்கப்பட்டோம்?
- இயேசுவோடு உயிர்த்தெழுதலில் இணைக்கப் படுமுன், அவரோடு எது சிலுவையில் அறையப்பட்டது?

- நமது பழைய மனிதனும், நமது பழைய பாவ சுபாவமும் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட பின், நமது உடலை எத்தகைய ஆயுதமாக நாம் ஒப்புக்கொடுக்கிறோம். (வச. 6-14)?

**மத்தேயு 28:18-28** ல் கிறிஸ்து பரத்துக்கு ஏறுமுன் கூறிய **இறுதி** மாபெரும் ஆணையைக் காண்க:

- சீஷர்களை உருவாக்குவதற்காக என்ன செய்ய வேண்டும் என்று இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களிடம் கூறினார் (பதில்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் அளித்து, அவரது கற்பனைகளை கைக் கொள்ளும்படி போதித்தல்)
- யாவருடைய அதிகாரத்தினால் நாம் புதிய, விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறோம்? (பதில். வச.18, இயேசுவின் அதிகாரத்தினால்)
- எவ்வகையான மக்களை நாம் சீஷர்கள் ஆக்க வேண்டும் (எல்லா மக்களையும் வச.19)

**அப். 2:37-47 ல் காண்க:**

- தன்னுடைய பிரசங்கத்தை ஏற்றுக் கொண்ட மக்களிடம் என்ன செய்ய வேண்டும் என்று பேதுரு கூறினான் (பதில். வச.37-38)
- மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட மக்களுக்கு இரண்டு ஆசீர்வாதங்களை பேதுரு வாக்களித்தார். (வச.38)
- இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களை அப்போஸ்தலர்கள் எவ்வளவு சீக்கிரமாக ஞானஸ்நானம் கொடுத்து சபைக்குள் ஏற்றுக் கொண்டனர் (வச.41-42)
- புதிதாக ஞானஸ்நானம் பெற்ற மக்கள் உடனடியாக என்ன செய்யத் தொடங்கினார்கள் (வச.42)

**அப். 16:13-40 ல் காண்க:**

- இயேசுவை நம்பி தங்கள் குடும்பங்களோடு இணைந்து ஞானஸ்நானம் பெற்ற இருவர் (வச.13-15, 25-31)
- இயேசுவை ஏற்றுக்கொள்ள மனதாய் இருப்போரின் குடும்பங்களை நாம் உடனடியாக சென்றடைய முயற்சி செய்வது ஏன் (வச.31. அப்.18:8ல் ஒரு முழுக் குடும்பமும் சேர்ந்து ஞானஸ்நானம் எடுத்துக் கொண்ட உதாரணம் வருகிறது)

**2. இந்த வார செயல்பாடுகளுக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்**

இதுவரை இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறாத புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் தர முயற்சி செய்யவும்.

ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அறியாத புதிய விசுவாசிகளை சந்தித்து விளக்கி ஞானஸ்நானத்துக்காக **ஏற்பாடு செய்யவும்.**

மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும்போது, பழைய நம்பிக்கை மற்றும் வாழ்க்கை முறையில் இருந்து மாறி கிறிஸ்துவுக்குள் புதிதாய்ப் பிறக்க வேண்டும் என்பதை **விளக்குங்கள்.** தேவையற்ற தாமதம் இன்றி அவர்களது விசுவாசத்தையும் மனம் திரும்பு தலையும் ஞானஸ்நானம் மூலம் உறுதிப் படுத்துங்கள். அவர்களைக் கொண்டு ஒரு புதிய சபையை ஆரம்பிக்க வேண்டும்.

பொது மன்றத்தில் **ஞானஸ்நானம்** தருவது ஆபத்தாக இருந்தால், பிலிப்பு எத்தியோப் பியனுக்கு தந்தது போலவும் (அப்.8:27-40), பவுல் பிலிப்பிய சிறை அதிகாரிக்கும் அவன் குடும்பத்துக்கும் தந்தது போலவும் (அப்.16:29-34) தனியாகத் தரலாம்.

ஞானாஸ்நானத்தின் போது சிலர் தங்கள் பேர்களை மாற்ற விரும்பலாம்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக திட்டமிடவும்:**

தற்போதைய தேவைக்கும் வட்டார பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும். பேழையைக் கட்டிய போது நோவா கீழ்ப்படிந்தது போல் நாம் இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை விளக்க வேண்டும் (பகுதி 1 ஐப் பார்க்கவும்)

ஆதி.6-9 லிருந்து நோவாவின் கதையை சுருக்கமாக மீள்பார்வை செய்க.

இயேசுவின் உயிர்த்தெழுந்த சரீரம் நோவாவின் பேழையை எவ்வாறு ஒத்திருக்கிறது என்று விளக்கவும்.

பெரியவர்களுக்காகப் பிள்ளைகள் தயாரித்த நோவைப் பற்றிய நாடகத்தை வழங்கட்டும். தாங்கள் தயாரித்த கேள்விகளையும் கேட்கட்டும்.

ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவோடு மரித்து ஒரு புதிய வாழ்க்கைக்குள் எழுகிறோம் என்பதை **ரோமர் 6:1-14** மூலமாக விளக்கவும்.

- யோவான் ஸ்நானகனைப் பற்றி **மத்தேயு மூன்றாம் அதிகாரத்தில்** இருந்து விளக்கவும். (பகுதி 1 பார்க்க)
- யோவான் ஸ்நானகன் ஏன் சில மதவாதிகளுக்கு ஞானஸ்நானம் தர மறுத்து, ஆனால், மிக மோசமான மனிதர்களுக்கு ஞானஸ்நானம் அளித்தார்.

இயேசு ஏன் ஞானஸ்நானம் எடுத்தார்? சீஷர்களை எப்படி உருவாக்க வேண்டும் என்று இயேசு கூறினார், **மத் 28:18-20** (பகுதி 1 பார்க்க) இரட்சிப்பை நாடிய மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று பேதுரு விளக்கினார் **அப். 2:37-41** (பகுதி 1 பார்க்க)

அப்போஸ்தலர்கள் எவ்வாறு முழு குடும்பங்களையும் ஞானஸ்நானம் படுத்தினர் (**அப். 16:31**) என்றும், இயேசுவை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் உள்ள குடும்பங்களை நாம் ஏன் உடனடியாக சந்திக்க வேண்டும் என்பதையும் விளக்குக. (பகுதி 1 பார்க்க).

**ஆதி 8:14-22** ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும். நோவாவின் புதிய உலகம் ஒரு குற்றமற்ற பலியின் இரத்தத்தோடு ஆரம்பித்ததை விளக்குக. இயேசு சிலுவையில் சிந்திய இரத்தம் சதா காலங்களுக்குமான இந்தத் தேவையை நிறைவு செய்தன.

**மனனம் செய்க.** அப். 2:38.

2 இராஜா. 5 லிருந்து **சீரிய நாட்டுத் தளபதியான நாகமானின் கதையைக் கூறவும் அல்லது நடிக்கவும்.**

தேவனுக்கு கீழ்ப்படிய அவன் எவ்வாறு கற்றுக் கொண்டான் என்பதைக் கூறுக.

யோர்தான் நதி நாகமானின் குஷ்டரோகத்தை எவ்வாறு கழுவவில்லையோ அது போலவே ஞானஸ்நான தண்ணீர் ஒருபோதும் நமது பாவத்தைக் கழுவாது என்பதை விளக்கவும். தேவனே அதை செய்கிறார்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net